# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 ஆனி 8 திங்கட்கிழமை (22-06 – 1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்:176



பொது சன நூலகம்
23 JUN 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# யாழ். மாவட்டத்தில் 34,000 குடும்பங்கள் நிவாரணம் இழப்பு!

## ஜூலை முதல் அமுல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோர் நிவாரணம் பெறும் 84 ஆயிரம் குடும்பங்களில் 34 ஆயிரம் குடும்பங்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதியுடன் நிவாரணம் நிறுத்தப்படவிருக்கிறது.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். ஏ. ஒபடகே இது தொடர்பான பணிப்புரையை யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனுக்கு விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 84 ஆயிரம் குடும்பங்கள் உலர் உணவு நிவாரணத்தைப் பெற்றுவருகின்றன.

இவர்களில் 40 சதவீதமானவர்களின் நிவாரணம் அதாவது 34 ஆயிரம் குடும்பங்களின் நிவாரணம் நிறுத்தப்படவிருக்கின்றது.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் ஒபடகே இந்தப் பணிப்புரையையாழ். அரச அதிபருக்கு அனுப்பி

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப வயித்தில் அடிஎண்டு சொல்லுங்கோ...!

## நிவாரணத்தை நிறுத்த வேண்டாம் ஜனாதிபதியிடம் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 22

"சுமுகநிலை ஏற்பட்டு மக்கள் சகஜ வாழ்க்கைக்கு திரும்பும் வரை உலர் உணவு நிவாரணத்தை நிறுத்த வேண்டாம்."

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்ட அவசர கோரிக்கையை ஜனாதிபதிக்கு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் நேற்று அவசர "பக்ஸ்" செய்தி ஒன்றை அனுப்பினார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ வாழும் மக்கள் நாளாந்த வாழ்க்கையை பெரும் கஷ்டத்துடனேயே நடத்துகிறார்கள்.

தொழில் வாய்ப்பு இல்லை. மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை. விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலை இதனால் உற்பத்திகளுக்கு உரிய விலையை அவர்கள் பெற முடியாத நிலை.

அரசியல்தீர்வு மூலம் சுமுக நிலை ஏற்பட்டு மக்கள் சகஜ வாழ்க்கை நிலைக்கு திரும்பிய பின்னர் நிவாரணத்தை நிறுத்துவது பற்றி யோசிக்கலாம்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள மக்கள் போசாக்கற்ற நிலையில் உள்ளனர். ஏற்கனவே வழங்கப்பட்டபொருள்கள் போதாததால் இந்நிலையில் அவர்கள் உள்ளனர். நிவாரணத்தையும் நிறுத்தினால் அவர்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிப்பார்கள்.

ஆகவே நிவாரணத்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தணிக்கை

யுத்தச்செய்திகளுக்கான தடை உத்தரவு காரணமாக பிரசுரத்துக்கு முன் அனுமதி பெறாத இராணுவச் செய்திகள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ஆ-ர்)

## தேர்தல் ஒத்திவைப்பு ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் செயல்

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

"யுத்தத்தை சாதகமாகப் பயன்படுத்தி அரசு மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்க முயற்சிப்பது மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிக்கும் செயல் ஆகும்."

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கண்டி றம்புக்வெல்லவில் நடைபெற்ற ஐ.தே.க. பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது.

யுத்தம் விரைவில் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்க முடியாது. யுத்தம் எப்பொழுது முடிவடையும் என்றும் கூற முடியாது. இந்நிலையில் தேர்தலை எவ்வளவு காலத்துக்கு ஒத்திவைக்க முடியும்?

மாகாண சபைகள் கலைக்கப்படும் வரை யுத்தம், தேர்தல் ஒத்திவைப்பு பற்றி சிந்திக்காத அரசு, சபைகள் கலைக்கப்பட்ட பின்பு சிந்திப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

தேர்தல் காலத்தில் மக்களிடம் செல்லத் தயார் இல்லை. அதற்காக யுத்தத்தை சாதகமாகப் பயன்படுத்துகின்றார்கள்.

தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்பதை ஐ.தே.க. ஏற்றுக்கொள்ள மாட்டாது. அப்படி ஒத்திவைக்கப்படுமானால் அதற்கு எதிராக போராட்டம் நடக்கும், இப்படி அவர் கூறினார். (இ-21)

## பட்டிருப்பு பொலீஸ் நிலையம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் பட்டிருப்பு பொலீஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் இரவு ஒருமணியளவில் தாக்குதல் நடத்தினர் என்று பலாலி இராணுவத்தலைமையக செய்திக் குறிப்பு தெரிவித்தது.

ஆர், பி. ஜி மற்றும் சிறிய ஆயுதங்கள் கொண்டு விடுதலைப் புலிகளின் ஒரு குழு பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்த மற்றொரு குழு எறாவூர் ரெலிகொம் நிலையத்துக்குள்புகுந்து, அங்கிருந்த 3 கோபுரங்களைகுண்டு வைத்து தகர்த்தது.

அதன் பின்னர் தேடுதல் நடத்திய படையினர் நேரம் குறித்து வெடிக்கும் குண்டு ஒன்றையும், 40 மி. மீ. கிரனேட்களையும். ஆர். பி. ஜி ரவையையும் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், பொது மகன் ஒருவரும் காயம் அடைந்தனர்-இப்படி அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-9)

## யாழ். புதிய மேயர் 29 இல் பதவியேற்பு

கொழும்பு, ஜூன் 22

யாழ். மாநகரமேயராகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி பொ. சிவபாலன் எதிர்வரும் 29 ஆம் திகதி பதவியேற்கிறார் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 4 உறுப்பினர்களும் அவருடன் சேர்ந்து அன்று பதவியேற்பர்.

பதவியேற்பைத் தொடர்ந்து மாநகரசபையின் முதலாவது கூட்டம் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையில் இருந்து விலகியிருப்பதாக அப்பிரதேச சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் எடுத்த முடிவு தொடர்பான விபரம் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-9)

## தமிழ் வர்த்தகர்களின் தொலைபேசிகள் ஒற்று?

கொழும்பில் உள்ள கோடீஸ்வரர்களான எட்டுத் தமிழ் வர்த்தகர்களின் தொலைபேசிகள் அண்மையில் தேசிய புலனாய்வுப் பிரிவினால் ஒற்றுக் கேட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தொலைத்தொடர்பு நிலையங்கள், மின்மாற்றிகள் தகர்ப்பதில் பொறுப்பானவர்களுடன் இந்த வர்த்தகர்களுக்கு தொடர்பு இருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவந்ததையடுத்தே இவர்களின் தொலைபேசிகள் ஒற்றுக் கேட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10-3)

## உண்ணாவிரதமுயற்சியை பயணிகள் கைவிட்டனர்!

திருகோணமலை, ஜூன் 22

திருகோணமலையில் தங்கியுள்ள அகதிகள் யாழ்ப்பாணம் செல்வதற்கு இருவாரத்தில் கப்பல் வசதி செய்து தருவதாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா உறுதி மொழி அளித்ததையடுத்து —

திருகோணமலை கண்ணாடித் தொழிற்சாலையில் தங்கியுள்ள அகதிகள் நேற்று மேற்கொள்ளவிருந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

கடந்த ஒன்றரை மாத காலம் அகதிமுகாமில் தங்கியுள்ள அகதிகள் நேற்று அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளவிருந்தனர்.

இந்த விடயத்தில் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு வழங்கியுள்ள உறுதி மொழியை அடுத்து உண்ணாவிரதம் நேற்று இடம்பெறவில்லை. (இ-3)

## உறுப்பினர் கடத்தல்பற்றி சுயேச்சைக் குழு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

தமது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற சுயேச்சைக் குழு எம். பி. யான நா. இ. இராமேஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எமது உறுப்பினர்கள் இருவர் சனிக்கிழமை நண்பகல் தமது வீட்டில் உணவருந்தும் வேளையில் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டனர்.

குறிப்பிட்ட கட்சியின் தற்பாதுகாப்பிற்கென அரசால் வழங்கப்பட்ட ஆயுதத்தை இன்று அக்கட்சி தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக உபயோகிப்பதாக நாம் உணருகின்றோம்.

இதனை தமிழ் பேசும் மக்களின் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் உகந்த வழிமுறையாக நாம் கருதவில்லை. மக்களை நேசிப்பதாக கூறிக்கொண்டு ஜனநாயகம் பேசும் இக்கட்சி இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவதை மக்கள் அனு

(10 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண கல்வி நிலையம்

22, இராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சாந்தி சினிமா முன்பாக, மேல் மாடியில்)

**எழுதுவினைஞர் சேவைக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை — 1998**

மேற்படி பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:-
I 22-06 திங்கள் 12.00 மணி
II 22-06 திங்கள் 4.00 மணி

(57050) -- நிர்வாகி

---

உ

## கூல்பார் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஆனி மாதம் 8ஆம் நாள் (22-06-1998) திங்கட்கிழமை நண்பகல் 11-50-1-36 மணியளவில் வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

**நியூலட்சுமி கூல்பார்**

திறக்கவிருப்பதால் அத்தருணம் தங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

தங்கள் நல்வரவை நாடும்
ஆ. கஜேந்திரன்

யாழ். வீதி,
உடுப்பிட்டிச் சந்தி.
(57048)

---

## வாழ்த்துகின்றோம்

எமது நிர்வாக உறுப்பினரான
கொக்குவில் மஞ்சவனப்பதி
பிரம்மஸ்ரீ வை. வெங்கடாசல சர்மா அவர்களின்
புத்திரன்

**சிரஞ்சீவி அகிலநாதசர்மா**

அவர்களுக்கு (உபநயனம்) இன்று நடைபெறுவதையிட்டு செல்வனுக்கு எங்கள் மனமார்ந்த ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.
(57047)

---

## 31ஆம் நாள் நினைவு ஆராதனை அழைப்பு

கடந்த 23-05-1998 சனிக்கிழமை
கொழும்பில் காலமாகிய எமது மூத்த புதல்வன்



அமரர்

**மாஸ்டர் தூ. போல் கஜேந்திரன்**

அன்னை மடியில் 12 — 10 — 1986
இறைவன் அடியில் 23 — 05 — 1998

எமது சிரேஷ்ட புத்திரன் அமரர் மாஸ்டர் தூ. போல் கஜேந்திரன் (பரி. யோவான் கல்லூரி, ஆண்டு-07 மாணவன்) அவர்களின் 31ஆம் நாள் நினைவு ஆராதனையும், மதிய போசனமும் 22-06-1998 இன்று திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு எமது இல்லத்தில் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அண்மை) நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் வரவை நாடும்:
வே. தூயகுமாரன், தூ. ஹேமநந்தினி.

இல, 10, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.
(57043)

---

## நோயாளர் கவனத்துக்கு

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல்மூலம் நாளை 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு செல்வதற்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் அனைவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதியே கப்பல் காங்கேசன்துறையிலிருந்து புறப்படுவதால் அன்றைய தினம் காலை 7 மணிக்கு வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

---

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

சினிமா ரசிகர்களின் பெரும் வரவேற்புடன் காட்சியளிக்கின்றது
கல்யாணப் பரிசு

எதிர்காலத்தில் எந்த ஒரு தியேட்டரிலும் இவ்வாறான ஒரு காட்சியைப் பார்க்க முடியாது என்பதனை நினைவூட்டுகின்றோம்.

காணத்தவறாதீர்கள்!

காதல் மன்னன்
ஜெமினிகணேசன்
சரோஜாதேவி
தங்கவேலு நடித்த

**கல்யாணப் பரிசு**

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56999)

---

## நாகம்ஸ்

**சினிமா**
சுன்னாகம்.

அகல வெண் திரையில்
22-06-98 திங்கள் முதல்
விஜயகாந்த் - வினிதா
நடித்த

**பதவிப் பிரமாணம்**

(C. D. வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30
(57045)

---

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

2 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த

**பாட்ஷா**

தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)

---

யாழ்.

## றீகல் வெண் திரையில்

(25 அடி அகலத் திரையில்)

10-30 மணிக்கு
கமல் - கௌதமி
ஜனகராஜ் நடித்த

**அபூர்வ சகோதரர்கள்**

(கட்டைக் கமலின் சாகசங்களைப் பார்க்கத் தவறாதீர்கள்)
( CD வெளியீடு )

2-30 மணிக்கு
சுப்பர்ஸ்ரார் ரஜனி,
றோஜா, மீனா நடித்த

**வீரா**

( CD வெளியீடு )

தினசரி 5 மணிக்கு
அதி பயங்கரத் தாக்குதல் சித்திரம்.
(57051)

---

**மாதாந்த ( ஜூலை ) பயிற்சிப் பரீட்சை**

வினாத்தாள்
விடைகளுடன்
பெற்றுக்கொள்ளலாம்.
BOND - யாழ். நகர்.
(57044)

---

# மரண அறிவித்தல்கள்

## மயிலு இராமச்சந்திரன்

கொடிகாமம் கஜமுகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் மயிலு இராமச்சந்திரன் 20-06-1998 அன்று அகால மரணமானார்.

இவர் மயிலு — வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், மயிலு சின்னத்துரை (இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், கொடிகாமம்), மயிலு சின்னராசா (கோகிலா கோப்பி பார், கொடிகாமம்), மயிலு செல்வராசா (பங்காளர், கஜமுகன் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-06-98) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் பருத்தித்துறை வீதி, குடமியன் வரணி இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
ம.சின்னத்துரை, ம.சின்னராசா,
ம.செல்வராசா
(சகோதரர்கள்)
(57034)

---

## சிவானந்த ஐயர் இராமகிருஷ்ணக்குருக்கள்

பூநகரியைப் பிறப்பிடமாகவும் துன்னாலை கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியாருமாகிய இராமகிருஷ்ணக் குருக்கள் 20-06-98 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சிவபதமெய்தினார்.

அன்னார், ஜெயகௌரியின் அருமைக்கணவரும், கானப்பிரியா, கணநாதன் ஆகியோரது பாசமிகு தந்தையும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நேற்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, துன்னாலை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன்னுத்துரை ஸ்ரீதரக்குருக்கள்
(சகலன்)

துன்னாலை,
கரவெட்டி.
(சி-4083)

---

## அருணாசலம் செல்லையா

கப்புதுவைச் சேர்ந்த அருணாசலம் செல்லையா 20-06-98 இல் காலமானார்.

இவர் தங்கமணியின் அன்புக் கணவரும், சிறீகாந்தன், ஜெயகாந்தன், சிவகாந்தி, சிவகாந்தன், விஜயகாந்தன் ஆகியோரது தந்தையும், மலர்விழி, மோகனசுந்தரம் (உடு. ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் மாமனாரும், ஆராதனா, விதுசா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21-06-98) கப்புதுவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
சிறீகாந்தன்
(மகன்—உடு. பல நோ. கூ. ச.)

கரவெட்டி,
கப்புது.
(57037)

---

திருமதி

## செல்லையா பாக்கியம்

கோண்டாவில் ஸ்ரேசன் றோட்டைச் சேர்ந்த திருமதி செல்லையா பாக்கியம் 21-06-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், நடராஜா (கோண்டாவில்), இராசதுரை (இ. போ. ச. மட்டக்களப்பு), தருமலிங்கம் (கோண்டாவில்), மகேசன் (கனடா), திருமதி இ. வசந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவி, மல்லிகா, சாரதா, மலர் (கனடா), இராஜேந்திரன் (கணக்காளர், இல. செஞ். சங்கம்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2-00மணிக்கு காரைக்கால் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன்மார், மருமகன்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.
(57049)

---

## மனவற்பிள்ளை நல்லையா

கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், 16/3 கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மனவற்பிள்ளை நல்லையா 16-6-98 அன்று காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 22-6-98 இன்று பி. ப. 4-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. திரேசம்மா
(மனைவி)

16/3, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(57042)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதி அணியின் தோல்வியை அடுத்து பயிற்சியாளர் கார்லோஸ் நீக்கம்!

## 94 இல் பிரேசில் அணியை வழி நடத்தியவர்

பாரிஸ், ஜூன் 22

உலக உதைபந்தாட்டத் தொடரில் சவுதி அணி சந்தித்த தோல்வியை அடுத்து அந்த அணியின் பயிற்சியாளர் கார்லோஸ் அல்பேர்ட்டோ (Carlos Alberto) அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

16ஆவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் தோல்வியடைந்து வெளியேறிய முதல் அணி என்ற பெயர் சவுதிக்கு கிடைத்துள்ளது.

கடந்த 12ஆம், 18 ஆம் திகதிகளில் நடந்த இரண்டு போட்டிகளிலும் சவுதி அணி தோல்வியடைந்தது.

சவுதி அணி மிக விரைவில் தோற்கடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருப்பதற்கு அரேபிய மற்றும் இஸ்லாமிய உலகிடம் சவுதி உதைபந்தாட்ட அதிகாரிகள் மன்னிப்புக் கோரியுள்ளனர். எதிர்காலத்தில் தமது அணிக்கு அதிர்ஷ்டம் கிடைக்கட்டும் என்று அவர்கள் பிரார்த்தித்துள்ளனர்.

கடைசியாக நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் பிறேசில் அணியின் பயிற்சியாளராக விளங்கிய கார்லோஸ் அந்த அணியின் வெற்றிவாகைக்கு வழிசமைத்தவர் எனக் கருதப்பட்டார். அதனையடுத்து தமது நாட்டு அணிக்கு பயிற்சி அளிக்க சவுதி அரசு அவரை பயிற்சியாளராக நியமித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-6)

# பிறேசில் அணி மோசமாக ஆடியது!

## ரொமாரியோ கவலை

பாரிஸ், ஜூன் 22

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக உலகக் கிண்ணப் போட்டியில் இடம்பெற முடியாது போனாலும் இன்னும் முதுநிலை வீரராகவே தாம் விளங்குவதாக பிறேசில் வீரர் ரொமாரியோ தெரிவித்திருக்கிறார்.

பாரிஸ் 'விளையாட்டு சஞ்சிகை' ஒன்றுக்கு ரொமாரியோ வழங்கிய பேட்டி கடந்த வெள்ளியன்று வெளியானது.

ஸ்கொட்லாந்துடனான முதல் போட்டியில் பிறேசில் அணி மோசமாக ஆடியது. பிறேசில் அணியின் வீரர்கள் ஆடுகளத்தில் பதற்றத்துடன் இருந்ததை என்னால் உணர முடிந்தது — என்று அப்பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)



கடந்த புதனன்று இத்தாலி — கெமறூன் அணிகள் பங்கு பற்றிய ஆட்டத்தின் போது தேசிய வர்ணங்களை முகத்தில் பூசிக்கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்திய இத்தாலிய பெண் ரசிகைகள்.

(ஐ)

# நம்பிக்கை இழக்காதீர்; மண்டேலா அறிவுரை!

## தென்னாபிரிக்க அணிக்கு

ஜோஹர்னஸ்பேர்க், ஜூன் 22

பிரான்ஸ் அணியிடம் தோற்றதற்காக நம்பிக்கை தளர வேண்டாம் என்று தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தமது நாட்டு அணியினருக்குத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணி கடந்த 12ஆம் திகதி நடந்த ஆட்டத்தில் பிரான்ஸிடம் 3 — 0 என்ற கோல் கணக்கில் தோல்வி கண்டது.

அணியின் கப்டன் லூகாஸ் ரடேபேயுடன் அதிபர் மண்டேலா உடனடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

''தளர்ந்து விடாதீர்கள்; மேலும் ஊக்கமுடன் விளையாடுங்கள். இன்னும் ஆட்டங்கள் உள்ளன. தென்னாபிரிக்கா முழுவதும் உங்கள் பின்னால் உள்ளது'' என்று மண்டேலா கப்ரனிடம் தெரிவித்தார்.

கடந்த வியாழனன்று தென்னாபிரிக்கா டென்மார்க்குடன் மோதியது, அந்த ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிந்தது.

(ஐ)

FRANCE 98

## உலக கிண்ண துணுக்குகள்

### பலூனால் பீதி

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் தொடக்கவிழாவின் போது வானில் பறக்க விடப்பட்ட பலூன்கள் மிக நீண்டதூரம் பறந்து சென்று தென்மேற்கு அல்ஜீரியாவின் கிராமப் பகுதியை அடைந்தன.

அவற்றைக் கண்ட அல்ஜீரியர்கள் தீவிரவாதிகளின் வெடிகுண்டுகளோ என எண்ணிப் பீதியடைந்தனர்.

(ஐ-10)

### கால் இறுதிக்கு ரொமாரியோ?

ரியோடிஜெனீரோ, ஜூன் 22

காலில் ஏற்பட்ட காயத்துக்காகச் சிகிச்சை பெற்று வரும் பிறேசிலின் பிரபல வீரர் ரொமாரியோ கால் இறுதி ஆட்டங்களில் பங்கு கொள்ள முடியும் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

காலில் ஏற்பட்ட காயத்தை அடுத்து பிறேசில் அணியில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.

தன்னை அணியில் இருந்து நீக்கியது ''தனது வாழ்க்கையிலேயே பெரிய ஏமாற்றம்'' என்று தெரிவித்துள்ள ரொமாரியோ டாக்டர்களின் முடிவு தனக்கு நம்பிக்கை அளிப்பதாக கூறினார்.

(ஐ)

### ரொனால்டோவின் பெண் நண்பி

பிறேசில் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ரொனால்டோ போட்டிப் பரபரப்பின் மத்தியிலும் தனது பெண் சிநேகிதியுடன் தொடர்பு கொள்ளத் தவறுவதில்லையாம். சுசனா வெர்னர் என்ற அந்தச் சிநேகிதியுடன் ரொனால்டோ தினமும் தொடர்பு கொள்வாராம்.

அவரது தனி அறையில் சகல வசதிகளும் அடங்கிய தொலைத்தொடர்பு சாதனங்கள் உள்ளன. அவற்றின் உதவியுடன் அவர் அடிக்கடி சுசனாவுடன் தொடர்பு கொண்டு பேசுகிறார்.

(ஐ-10)



## இன்றைய ஆட்டம்

பாரிஸ், ஜூன் 22

பிரான்ஸில் நடைபெறும் 16 ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று இலங்கை நேரப்படி இரவு இருஆட்டங்கள் இடம் பெறவுள்ளன.

★ இரவு 9.30 மணி— கொலம்பியா எதிர் ரியூனீஷியா

★ இரவு1மணி—ருமேனியா எதிர் இங்கிலாந்து

(ஐ-ரீ)

## பிரசவ காட்சி இன்ரர் நெட்டில்

ஒரு தாயின் பிரசவத்தின் போது நடைபெறும் நிகழ்வுகள் பற்றி இதுவரை காலமும் வைத்தியர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ஆனால் கடந்த வாரம் முதல் உலகிலுள்ள அனைத்து தரப்பு மக்களும் இதனை அறியக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் 40 வயதுடைய ஒரு பெண்ணுக்கு கடந்த வாரம் இடம்பெற்ற பிரசவம் ''இன்ரர் நெட்'' மூலம் ஒலிபரப்பப்பட்டது. இந்தப் பெண்மணியின் அனுமதியுடனேயே இந்தப் பிரசவம் ஒளிபரப்பப்பட்டது.

அந்தப் பெண்ணுக்கு சுகப் பிரசவமாக ஆண்குழந்தை ஒன்றும் பிறந்துள்ளது.

இதன் மூலம் பிரசவம் பற்றிய தவறான கருத்துக்கள் அகல்வதற்கு வழி ஏற்பட்டுள்ளது என்று பிரசவித்த பெண்ணும், டாக்டர்களும் தெரிவித்துள்ளனர்.

## ஊரடங்கு

ஜம்மு காஷ்மீரில் தோடா மாவட்டத்தில் திருமணச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்றவர்களில் 25 பேர் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து தோடா மாவட்டத்திலும் வேறு சில இடங்களிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வியட்நாமில் விபத்துக்கள் குறைவு

பாரிஸ், ஜூன் 22

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வியட்நாம் பங்கேற்கவில்லை எனினும் இந்தப் போட்டியின் மூலம் அந்த நாட்டில் போக்குவரத்து காரணமாக உண்டாகும் விபத்துகள் குறைந்துள்ளன.

போட்டி ஆரம்பித்த நாள் முதல் வியட்நாமின் மிகப் பெரிய நகரங்களான ஹோசிமின், ஹோனி ஆகிய நகரங்களிலுள்ள பெரிய மருத்துவ மனைகளில் விபத்து காரணமாக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. நாளொன்றில் சராசரியாக நூற்றி70 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவர். ஆனால் இப்போது 50 பேர் தான் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்களாம்.

போட்டி நடைபெறும் வேளையில் தொலைக்காட்சியை விட்டு யாரும் நகர்வதில்லை. ஒருசிலரே வீதிகளில் நடமாடுகின்றனர்.

ஆகமொத்தத்தில் இவ்விதமாக விபத்துக் குறைந்தது இரண்டு விதத்தில் தங்களுக்கு மகிழ்ச்சி என்கின்றனர் மருத்துவர்கள். ஒன்று வேலைப்பளு குறைவு. இரண்டாவது தாங்களும் போட்டியைக் கண்டுகளிக்கலாம்.

(ஐ-ரீ)

# உலக அழகியின் தேர்தல் வாக்குறுதி

ஹரகாஸ், ஜூன் 22

தென்னமெரிக்காவில் உள்ள வெனிசுவேலா நாட்டில் எதிர்வரும் டிசம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் அந்நாட்டைச் சேர்ந்த முன்னாள் உலக அழகி இர்னேஷெயர் போட்டியிடுகிறார்.

நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அடுத்தஉலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெனிசுவேலா அணியையும் இடம்பெறச் செய்வேன் என்று அவர் தேர்தல் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

''நான் சொல்வது உங்களுக்கு சிரிப்பாக இருக்கலாம். ஆனால் நிச்சயம் அது நடக்கும்'' என்றார் அழகி இர்னேஷெயர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புகளில் அழகி இர்னே இரண்டாவது இடத்தை வகிக்கிறார்.

வெனிசுவேலா இதுவரை உலகக் கிண்ணப்போட்டிக்கு தகுதி பெற்றதில்லை.

(ஐ-10)

## ஈரானின் வெற்றி எதிர்பார்ப்பு!

தெஹ்ரான், ஜூன் 22

உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்றிரவு அமெரிக்க — ஈரானிய அணிகள் மோதவிருந்த ஆட்டத்தின் மீது அரபு உலக ரசிகர்களின் கவனம் திரும்பியிருந்தது.

இந்த ஆட்டத்தில் அமெரிக்க அணிக்கு எதிரான வெற்றியை ஈரானியர்கள் தமது தேசிய வெற்றியாக கருதுவதாகத் தகவல்கள் தெரிவித்தன.

(ஐ)

# ஷெரீப் - வாஜ்பாய் கொழும்பில் சந்திப்பர்

## பாகிஸ்தான் அதிகாரி தகவல்

இஸ்லாமாபாத் ஜூன் 22

கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டின் போது இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயும் பாகிஸ்தான் பிரதமர் நவாஷ்ஷெரீப்பும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'சார்க்' அமைப்பின் கூட்டம் ஜூலை 21 ஆம் திகதிக்கும் 31 ஆம் திகதிக்கும் இடையில் நடக்கும் எனவும், மாநாடு நடந்து கொண்டிருக்கும் போது ஒரு பகுதியில் இரு தலைவர்களும் சந்தித்துக் கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## எச்சரிக்கை

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை பார்வையிடச் சென்றுள்ள பிரிட்டிஷ் பிரஜைகள் அங்கு வன்செயல்களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ரொனி பிளயர் எச்சரித்துள்ளார்.

இங்கிலாந்து — ரியூனீசியா அணிகளுக்கு இடையே நடந்த போட்டியின் போதும், அதற்கு முதல் நாளும் இங்கிலாந்து ரசிகர்கள் மோதலில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

G.J.L, JVC, ST 25 மொடல் டெக் வகைகள் (யப்பான்) வீடியோ கசற் (ஒறியினல் யப்பான்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. செந்தூரன், இல. 4, மேதர் லேன், மானிப்பாய். [57009]

சண்டிலிப்பாய்ச் சந்தியில் 8¾ பரப்பு வெறும் காணியும், ஐயனார் கோயிலடி பிரதான வீதியில் 6½ பரப்பு வீட்டுடன் காணியும் மற்றும் திருநெல்வேலியில் வீட்டுத் தளபாடங்கள் Freezere Fridges தையல் மெசின்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 106, பலாலி வீதி, திருநெல்வேலி. (தபாற்பெட்டிச் சந்தியடி.) [56989]

### மணமகன் தேவை

இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த கணிதபாட ஆசிரியை, அவிட்டம் 1 ஆம் பாதம், வயது 34 உடைய மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பு: புஸ்பா திருமண சேவை, 559, K.K.S. வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம். [57013]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் மனிதர்களே இல்லாத யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கதை. 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை வீரகேசரியில் எழுதிய கட்டுரைகள் எங்கும் கிடைக்கும் ரூபா 50. [57014]

### தவறிவிட்டது

சிறீஸ்கந்தராஜா தர்மினி என்பவரது (NO. 787052355 V) தேசிய அடையாள அட்டை பலாலி வீதி, கோண்டாவில் டிப்போவுக்கும், கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டிப்போ முன்பாகவுள்ள கவாஸ் கொமினிக்கேஷனில் ஒப்படைக்கவும். [57020]

### வீடு விற்பனைக்கு

NO. 6 சோமசுந்தரம் லேன் சுண்டுக்குளியில் (தொலைத்தொடர்பு நிலையத்துக்குப் பின்னால்) 5 அறைகள் கொண்ட மற்றும் மூன்று அறை குளியலறை வசதியுடையதும் Servant, Bath Room, கராஜ் என்பவற்றுடன் கூடிய 3 பரப்புடன் வீடுவிற்பனைக்குண்டு. தொடர்பு: 749, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [57023]

### தேவை

தமிழ், ஆங்கிலம் தெரிந்த தட்டெழுத்தாளர் தேவை. 40 — 50 வயதுக்கு இடைப்பட்டவர் விண்ணப்பிக்கவும். கடிதத் தொடர்பு: (மே/பா 749, உதயன்.) [57039]

## கிணறுகளை திருத்த நிதி

வலி.வடக்கு, ஜூன் 22

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொதுக்கிணறுகள், பழுதடைந்த மலசலகூடங்களைத் திருத்தியமைத்தல், நிர்மாணித்தல் போன்றவற்றுக்காக சுமார் ஆறுலட்சம் ரூபா நிதி யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் 15 பொதுக் கிணறுகளும் 50 மலசல கூடங்களும் திருத்தியமைக்கப்படுவதுடன் புதிதாக முப்பது மலசலகூடங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன. (ஐ.86)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
## யாழ். கிளை

செயல் திட்ட உத்தியோகத்தர் - சுகாதாரம்

### மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தகைமை: க.பொ.த. (சா.த) கணிதம் ஆங்கிலம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன்.

வயது: 30 - 60 வரை

அனுபவம்:
1. தமிழ், ஆங்கில அறிவில் தேர்ச்சி உடையவர்.
2. முதல்உதவி, சுகாதாரம், மருந்துகள் தொடர்பான அறிவுடையவர்.
3. யாழ். மாவட்டத்தில் எல்லா இடங்களுக்கும் சென்று சுகாதார கருத்துரை வழங்கக் கூடியவர்.

விண்ணப்ப முடிவு: **01—07—1998** பிற்பகல் 3.00 மணி

நேர்முகப் பரீட்சை **04—07—1998** முற்பகல் 10.00 மணி

நேர்முகப் பரீட்சை கீழ்வரும் விலாசத்தில் நடைபெறும். அப்போது தே. அ. அட்டை, கல்விச் சான்றிதழ்கள், நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றின் மூலப் பிரதிகள் சமர்ப்பித்தல் வேண்டும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

— கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
19—06—98 (சி/4069)

---

## தேவை

1. குடிசார் படவரைஞர்:
   தேசிய தொழில் நுட்ப சான்றிதழுடன் 2 வருட அனுபவம்.
2. வேலை மேற்பார்வையாளர்:
   தேசிய தொழில்நுட்ப சான்றிதழுடன் 2 வருட அனுபவம்.

தகுதியுடையோர் **24.25-06-98** ஆம் திகதிகளில் சான்றிதழ்களுடன் காலை 9.30 முதல் 13.00 வரை நேரில் சமுகம் தரவும்.

விளம்பரதாரர்:-
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(57017)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் C.S. திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்)

மலர்வு **15 — 10 — 1928** உதிர்வு **02 — 07 — 1997**

ஆண்டு ஓடி மறைந்தாலும் நின் நிழலில் ஒளி மங்கவில்லை. பயணம்தான் சென்றனையோ? வருவார்! வருவார்! என்று ஏங்கும் இந்த நெஞ்சுகளுக்கு என்ன பதில் எடுத்துரைப்பாயோ? நீ சிந்து என்று அழைக்கும் குரல் கேட்டு பப்பா பப்பா என்று யன்னல் வழி நின்று பார்க்கும் சிந்துவுக்கு என்ன பதில் கூறுவோம் பப்பா.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
பாசமிகு மக்கள்,
மருமகன், பேர்த்தி.

'தாயகம்'
மீசாலை கிழக்கு, மீசாலை. (57028)

---

## நீங்கா நினைவில் ஈராண்டு



## செல்வன் வேலு சனகன்

அன்னை மடியில் 21 - 02 - 1977 அமரன் அடியில் 13 - 06 - 1996

திதி: 22 - 06 - 1998

ஈராண்டு ஆனாலும் எம்துயர் மாறாது! என்றும் உன் நினைவுகளோடும் உணர்வுகளோடும் கலந்து வாழும்:

அப்பா, அம்மா,
அக்காமார், தங்கை.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (57038)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 08 — 01 — 1980



உதிர்வு 23 — 05 — 1998

செல்வன்

## பரராசசிங்கம் பிரகலாதன்

(பிரகாஷ்)

(உயர்தர வகுப்பு மாணவன், நயினாதீவு மகாவித்தியாலயம்)
நயினாதீவு 5A

எமது குடும்பத்தின் பாசதீபம் செல்வன் பரராசசிங்கம் பிரகலாதன் (பிரகாஷ்) இறைவியின் பாதாரவிந்தங்களிற் பிரகாசிக்கவென எமை விட்டுப்பிரிந்து இன்று 31 ஆம் நாள். இத்தினத்தில் எமது செல்வத்தின் ஆத்ம சாந்திக்காக புவன மாதாவாகிய அன்னை ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் பாதமலர்களைப் பணிந்து பிரார்த்திக்கும் இவ்வேளைதனில் அவர் நோய்வாய்ப்பட்ட மூன்று தினங்களிலும் எல்லா வழிகளிலும் உதவியவர்களுக்கும், அவர் மறைந்த போது எம்மை ஆற்றி ஆறுதலளித்தவர்களுக்கும், அவரது இறுதிக்கிரியைகளின் போதும் அதன் பின்னர் நடந்த கிரியைகள் அனைத்திலும் சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'ஆசைக்கடலில் அகப்பட்ட அருளற்ற
அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்படவிருந்தேனைநின்பாதமென்னும்
வாசக்கமலம் என் தலைமேல் வலிய
வைத்தாண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர்பாகத்து
நேரிழையே.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்.

"சித்ராலயா",
5A. வட்டாரம்,
நயினாதீவு. (57015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 26 — 06 — 1926

மறைவு 23 — 05 — 1998

அமரர்
**நடராசா (வைத்தியர்) மார்க்கண்டு**
(குளப்பிட்டி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 22-06-98 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற விருப்பதால் உற்றார், உறவினர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மா. நாகேஸ்வரி (மனைவி),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

நவாலி வடக்கு,
நாச்சிமார் வீதி,
மானிப்பாய்.

(56931)

## 31 ஆம் நாள் நீங்காத நினைவும் நன்றி நவிலலும்



தாயின் மடியில் 09 — 10 — 1917

இறைவன் அடியில் 23 — 05 — 1998

## தம்பிப்பிள்ளை ஏரம்பமூர்த்தி

எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் கடிதங்கள் மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தும் எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் 22 - 06 - 98 இன்று திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி!

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(57001)

# நினைவலைகள்

**31 ஆம் நாள்**



கொக்குவில் மேற்கு

## அமரர் விசுவலிங்கம் குமாரசாமி
( குமார் )

**தோற்றம்:** 17 - 08 - 1925

**மறைவு:** 23 - 05 - 1998

**11 ஆவது வருடம்**



## அமரர் குமாரசாமி சத்தியகுமார்
( சத்தி )

**தோற்றம்:** 19 - 03 - 1961

**மறைவு:** 18 - 11 - 1987

சத்தியை இழந்த நாள் முதல்
சத்தியை இழந்த எம் தந்தையே!
புவியுலகப் பொழுது முடிந்து
புண்ணியத் தாள் புகுந்த நாளை
இறைஞ்சி வணங்குகின்றோம் - எம்
இனியவரே இறையவராவீர்!

**மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரமக்கள்.**

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு.

(சி/4080)

## புதிய மின் கம்பங்கள்

சண்டிலிப்பாய், ஜூன் 22
சண்டிலிப்பாய் பிரதான வீதியிலுள்ள மின்கம்பங்கள் இலங்கைமின்சார சபைஊழியர்களினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன. சேதமடைந்த மின் கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின் கம்பங்கள் நாட்டப்பட்டு வருகின்றன. அத்துடன் மின்சார வயர்கள் இல்லாத இடங்களுக்கு புதிய மின்வயர்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.
(ஐ-135)

## நூலகரை நியமிக்க கோரிக்கை

வடமராட்சி, ஜூன் 22
பருத்தித்துறை நகர சபைக்கு நூலகர் ஒருவரையும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஒருவரையும் நியமிக்குமாறு பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வி. விஜயரட்ணம் வடகிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தைக் கோரியுள்ளார்.

சுகாதாரப் பரிசோதகர் இன்மையால் நகரில் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கஷ்டங்கள் இருப்பதாகவும், நூலகத்திற்கு நூலக சேவகர் ஒருவர் மட்டுமே இருப்பதாகவும், இதனால் நூலகசேவைகளை பூரண சேவையாக அளிக்க முடியாதிருப்பதாக அந்தக் கோரிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
(ஐ- 173)

## கண்காட்சி

யாழ்ப்பாணம் ஜூன் 22
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும் கண்காட்சி எதிர்வரும் 28ஆம் 29 ஆம் திகதிகளில் காலை 9. 30 மணி முதல் மாலை 5 மணி வரை, பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இரு நாள் நிகழ்வுகளுக்கும் திருமதி ஜெ. குலசிங்கம் தலைவராகவும், முதல்நாள் பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி லோ. குமாரசாமியும் இரண்டாவது நாள் பருத்தித்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினமும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். [ஐ-ரீ]

## விபூதி வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 22
வண்ணை, சாந்தையர் மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் இந்துக்களின் பாவனைக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சிவசின்னமான விபூதியை அண்மையில் வெளியிட்டு வைத்துள்ளனர்.
(ஐ-ரீ)

## கணித, விஞ்ஞான தினம்

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய கணித, விஞ்ஞான தினம் இன்று திங்கட்கிழமை கணித, விஞ்ஞான மன்றத்தின் தலைவி செல்வி அ. மேரியூட் டிலானி தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. விக்கினேஸ்வரன் கலந்து கொள்ளுவார். கண்காட்சியும் நடைபெறும்.
(ஐ-103)

## வீதி திருத்த வேலை

நெடுந்தீவு, ஜூன் 22
அனலைதீவு, புளியந்தீவுத் துறைமுகங்கள் இரண்டும் அனலைதீவு பிரதான வீதியும் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான வேலைகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
(ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனரேட்டரின் பளு அதிகரிப்பதால் நல்லூர்ப் பகுதியில் மின் துண்டிப்பு!

நல்லூர், ஜூன் 22

முத்திரைச்சந்தியில் உள்ள ஜெனரேட்டர் மூலம் மின் விநியோகிக்கப்படும் நல்லூர் பிரதேசத்தில் தற்போது அடிக்கடி மின் துண்டிக்கப் படுகிறது.

இரவு வேளையிலும், அதிகாலையிலும் ஒன்று விட்டு ஒரு தினம் வழங்கப்படும் இந்த மின் விநியோகம் சுமார் ஒரு மணிநேரம் வரை துண்டிக்கப்படுகிறது.

இரவு 7 மணி முதல் 11.30 மணி வரை கிடைக்கும் மின் சுமார் ஒரு மணிநேரம் துண்டிக்கப்படுவது பாவனையாளர்களுக்குப் பாதிப்பை உண்டு பண்ணுகிறது.

மாதாந்தம் ஒழுங்காகக் கட்டணம் அறவிடப்படும் அதேவேளை அத்தியாவசியமாக மின் தேவைப்படும் இரவு நேரத்தில் நீண்ட நேரம் மின் துண்டிக்கப்படுவதாக பாவனையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

ஜெனரேட்டரின் பளு அதிகரிப்பதே மின் துண்டிக்கப் படுவதற்கு காரணம் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாவனையாளர்கள் வலுகூடிய மின்உபகரணங்களைப் பாவிப்பதால் ஜெனரேட்டரின் அதிஉச்ச வலுவை விட மின் பாவனை அதிகரிப்பதால் மின்னைத்துண்டித்து ஜெனரேட்டரைப் பாது

...காக்கவேண்டி உள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மின் வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில்ஒரு சிலர் வலு கூடிய உபகரணங்களைப் பாவிப்பதால் ஒட்டுமொத்தமாக எல்லா பாவனையாளர்களும் பாதிக்கப் படவேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஜ-103)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வி

### கார்த்திகேசு கார்த்திகாயினி

சமரபாகு 'ஈஸ்வரி இல்லத்தில்' வசிக்கும்
கார்த்திகேசு விஜயாதேவி தம்பதிகளின்
செல்வப் புதல்வி கார்த்திகாயினி

தனது முதலாவது பிறந்த நாளை (22. 6. 98) இன்று தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக்கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, ஐயா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, வீரரூபன் மாமா, அன்ரிமார், பெரியப்பா, பெரியன்ரா, சித்தப்பாமார், அன்ரிமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் எம்பெருமான் அருள் பெற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

நெல்லைக்குமரன்,
(ஈஸ்வரி அரிசிஆலை)
ரேடர்ஸ் நண்பர்கள்
நெல்லியடி.

சமரபாகு,
கரும்பியோடை,
வல்வெட்டித்துறை.

(57624)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

22 – 06 – 1998

யா / நயினாதீவு மகா வித்தியாலய
உயர்தர வகுப்பு மாணவன்

### பரராசசிங்கம் பிரகலாதன்

( பிரகாஷ் )

" அன்பின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
எங்கள் இதயத்தில் என்றும்
நீங்கா நிற்கும் நிறைவான
— உத்தம மாணவனே ! "

உங்கள் ஆத்மா சாந்தியடையவும், உமது குடும்பம் மன அமைதியடையவும் அருள் மிகு நயினை நாக பூஷணி அம்பாளைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ நயினாதீவு மகாவித்தியாலயம்.

(57031)

## போட்டியில் முதலிடம்

வலி,தென்மேற்கு, ஜூன் 22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் 175 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய ஆங்கில பேச்சுப் போட்டியில் செல்வி சிவஜா சிதம்பரநாதன் முதலாம் இடம் பெற்றுள்ளார், எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் இவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளது.

(ஜ-185)

## செப்ரிசீமியா மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

செப்ரிசீமியாவின் தாக்கத்திற்குள்ளாகிய வயோதிபப் பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

மாதகலில் இருந்து இடம் பெயர்ந்து அரியாலையில் வசிக்கும் கதிரவேலு சிவபாக்கியம் ( வயது 63 ) என்பவரே மரணமானவராவார்.

கடந்த 13ஆம் திகதி காய்ச்சல் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு மறுநாள் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட நிலையிலேயே இவர் மரணமானார்.

( ஜ- 15- 139 )

## ஆண்டு விழா

கொழும்புத்துறை, ஜூன் 22

கைதடி நவீல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலையின் 31 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், அதனையொட்டிய பழைய மாணவர்களின் சிறப்பு நிகழ்வும், கலந்துரையாடலும் அண்மையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றன.

(ஜ-30)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

### பானு கந்தவனச்செல்வன்

மலர்வு: 25–05–1970

உதிர்வு: 24–05–1998

எம் உள்ளங்களில் என்றுமே அணையாத அன்புத் தீபமாக ஒளிவீசும்குடும்பக் குலவிளக்கே! எங்கள் அனைவரையும் ஆறாத் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டு மறைந்து சென்றாலும் உந்தன் நினைவு என்றென்றும் எங்கள் இதயங்களை விட்டு நீங்காது! உந்தன் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கிறோம்!

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், பலவகையில் உதவி புரிந்தவர்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தியும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும், பிரார்த்தனை செய்தும் எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றி கூறும் இவ்வேளையில் 23–06–98 செவ்வாய்க்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், குடும்பத்தினர்,
தந்தை குடும்பத்தினர்

'ஜெயசதனம்',
தாவடி,
கொக்குவில்.

(56918)

## 43-வது பிறந்தநாள் நினைவலைகள்



அமரர் சுப்பிரமணியம் தனபாலசிங்கம்
(உரிமையாளர்,சிறி அம்பாள் ஸ்ரோர்ஸ்,திருநெல்வேலி)

மொட்டாக அன்னைமடியில்
22 – 06 – 1956

சருகாக அவனடியில்
11 – 05 – 1998

நயம் பட உரைக்கும் என் நாயகனே!
நாற்பத்தி மூன்று அகவையில் நமை விட்டு
ஓடியதன் நோக்கம் தான் என்ன?
உடலால் எமை விட்டுப் பிரிந்தாலும்
எம்மோடு வாழும் இதய தெய்வமே!
உந்தன் புன்சிரிப்பும் அன்பு கலந்த
அக அழகும் கம்பீர நடை அழகும்
இனி எப்போ நாம் காண்பது?
பெற்றெடுத்து பேரன்பு சொரிந்ததந்தையே
நீங்கள் பிறந்த நாள் இன்றைக்கு
ஆண்டு தோறும் சுற்றி நாங்கள் இருந்தும்மை
அணைத்துக் கொஞ்சி மகிழ்வோமே!
நீங்கள் பரகதியில் வீற்றிருக்கும் நிறைவை
எண்ணி உற்ற துயர் தாங்கி நிற்கும்

உங்கள்
மனைவி, பிள்ளைகள்,
தந்தை,தாய், சகோதரர்,
மைத்துனர், மைத்துனி

பொற்பதி றோட்,
கொக்குவில்.

(57026)


## தேவை

சமையல் காஸ் வெற்று சிலிண்டர்கள் நல்ல நிலையில் இருந்தால் 1500 ரூபாவுக்கு மேல் வாங்கப் படும்.

விலாசம்:-
NO: 377,
மணிக்கூட்டுவீதி
(பெருமாள்கோயில் அருகில்)
யாழ்ப்பாணம்.

(57027)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சிந்திக்க வேண்டியது

அண்மைக் காலமாக தமிழ் மக்களில்மிகப்பெரும்பாலானோரின் கருத்தாக அமைந்த ஒரு விடயம் இப்போது தீர்மான வடிவம் பெற்றுள்ளது.

கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழு கடந்த வெள்ளிக்கிழமையன்று நிறைவேற்றிய தீர்மானம் தென்னிலங்கையில் வாழும் மக்களின் கருத்தாக மட்டுமன்றி, தமிழரின் தாயகமான வடக்கு—கிழக்கில் வாழும் தமிழரின் கருத்தாகவும் விளங்குகிறது.

அந்தத் தீர்மானம்: தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை காலமும் அரசுக்கு கொடுத்து வந்த ஒத்துழைப்பை உடனடியாக வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும்—என்பதேயாகும். கடந்த நான்கு வருடங்களாக தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துக்கு ஆதரவு-முண்டு-கொடுத்து எதனைப் பெரிதாகத் தமிழர்களுக்குச் சாதித்துவிட்டன?

தமிழர்கள் மீது மறைமுகமாகவும், நேரடியாகவும் அரசாங்கம் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து வருகிறது.

தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளை மதித்து நடக்கும் நிலைக்கு அரச அதிகாரிகள் இன்னும் திருந்தவில்லை. சர்வதேச மன்னிப்புச்சபையின் 1998 அறிக்கையில் தமிழர்களின் மனித உரிமைகள் பறிக்கப்படுவது மீண்டும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவது, இம்சிக்கப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது போன்ற செயற்பாடுகளைத் தானும் நிறுத்துவதற்கு தமிழ்க் கட்சிகளிடம் சக்தி எதுவும் இல்லை என்பதை தமிழ் மக்கள் நன்றாக உணர்ந்துள்ளார்கள். தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான சுயமரியாதைக்குவேட்டுவைக்கும் அரச அதிகாரிகளின் நடவடிக்கைகளையே தடுத்து நிறுத்த முடியாத அரசியற் செல்வாக்கற்ற தமிழ்க்கட்சிகளால் தமிழர்களுக்கு எவ்வாறு உரிமைகளைப் பெற்றுத் தரமுடியும் என்ற கேள்வி எழுந்துள்ளமை இயல்பானதே.

தமிழர்களுக்கு எதையேனும் வழங்க முடியாத இயலாமைப் பொறிக்குள் அவர் சிக்கியுள்ளார். இதனை தமிழ் அரசியற் கட்சிகள் தெரிந்து கொள்ளாவிடினும் — கண்டு கொள்ளாவிடினும்— தமிழ் மக்களால் துலக்கமாகக் காணமுடிகிறது.

தீர்வுப் பொதியை ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து வெகு சாதுரியமாகப் பின்தள்ளிவிட்டன.

ஜனநாயகத்தின் அடித்தளமான தேர்தலையே ஒத்திப் போடும் அளவுக்கு அரசின் போர்க்குணம் மிகுந்து விட்டது.

இதற்குப் பின்னரும் இது விடயத்தில் "அதிசயம்" நடக்கும் என்றோ, மந்திரத்தால் மாங்காயை வீழ்த்த முடியுமென்றோ நினைக்க முடியுமா?

ஆகவே, அரசைத் தமது வழிக்குக் கொண்டு வருவதற்காக வேனும், தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துக்கு வழங்கிவரும் ஆதரவை தற்காலிகமாக என்றாலும் நிறுத்தி தமக்கும் 'பலம்' உண்டென்பதை காட்டுவதற்கு முனையும் காலம் வந்துவிட்டது. சிந்திப்பார்களா?

# யாழ். பல்கலைக் கழக ஊழியருக்கு கஷ்ட நிவாரணம் ஏன் இல்லை?

## ஊழியர் சங்கம் அறிக்கை

**யாழ். பல்கலைக்கழக ஊழியருக்கு கஷ்ட நிவாரணம் வழங்கப்படாததை ஆட்சேபித்து நாளை செவ்வாய்க்கிழமை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.**

**இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கமும், யாழ். பல்கலைக்கழக எழுது வினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியமும் கூட்டாக விடுத்த அறிக்கை இங்கே பிரசுரமாகுகிறது.**

போர்ச் சூழல் நிலவும் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் பணிபுரிகின்ற அரச ஊழியர்களுக்கு 1996 ஜூலை முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்கு கஷ்ட நிவாரணம் வழங்கப்பட்டமை பற்றியும் இப்பிரதேசத்தில் உள்ளடங்கும் பல்கலைக்கழகங்களுள் ஏனைய பல்கலைக்கழக பணியாளருக்கு இந்நிவாரணம் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதையும் தாங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் மட்டுமே இது தொடர்பான பொது நிர்வாக சுற்றறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அமுல்படுத்தினால் மட்டுமே பல்கலைக்கழகங்கள் இதை வழங்க முடியுமெனத் தெரிவித்தது. அவ்வாறு அமுல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதியளித்தது. நாமும் இவ்வாக்குறுதி நிறைவேற்றப்படுமென நம்பினோம்.

இடப்பெயர்வின் பின் 1996 மே மாதம் எமது பல்கலைக்கழக மீள் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு உயர் கல்வியமைச்சர், யாழ். பல்கலைக்கழக ஊழியருக்கு கஷ்ட நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார். ஆசிரிய தொழிற்சங்கம் உள்ளிட்ட பல்கலைக்கழக பணியாளர் தொழிற்சங்கங்கள் அனைத்துமே பல தடவைகள் மானிய ஆணைக்குழுவுக்கும், அமைச்சருக்கும், மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும் இது தொடர்பாக வேண்டுகோள்களை விடுத்திருந்தன.

1997 டிசம்பரில் ப.மா.ஆ. தலைவர் உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இக்கொடுப்பனவு மறுக்கப்படுவது நியாயமல்ல என்பதைச் சுட்டிக்காட்டிக் கடிதம் எழுதியிருந்தார்.

ஆனால் இன்றே 97/98 க்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கும்படி அறிவுறுத்தல் சுற்றறிக்கை வெளிவந்துவிட்டது. இச் சுற்றறிக்கை கூடப் பல்கலைக்கழக ஊழியருக்கென விரிவுபடுத்தப்படவில்லையெனக் கூறப்படுகிறது.

ஆனால், கிழக்கிலங்கை, தென்கிழக்குப் பல்கலைக் கழகங்கள் இச் சுற்றறிக்கை விரிவாக்கம் பற்றியெல்லாம் கவலையுறவில்லை. தமது ஊழியருக்கு எத்தகு தயக்கமுமின்றி 1996 ஆம் ஆண்டுக்குரிய கொடுப்பனவை உடனடியாக வழங்கின.

எமது பல்கலைக்கழக ஊழியர்களின் இடப்பெயர்வின் அவலங்களைச் சந்தித்து மீண்டவர்கள்— எமது பல்கலைக்கழக நிர்வாகத்தின் அழைப்பை யேற்றுக் கிளிநொச்சி அலுவலகத்தில் பணிபுரியக் குடும்பத்துடன் கடல் கடந்தவர்கள் — பின்னர் 1996 ஏப்ரலில் அதே பல்கலைக் கழக நிர்வாகம் மீண்டும் யாழ். வளாகத்துக்கு வருமாறு அழைத்த போது பெரும் பிரயாண இடரின் மத்தியில் இங்கு மீண்டவர்கள் — பல்கலைக்கழகப் புனர் நிர்மாணப் பணிகளில் உயிரிழப்பைச் சந்தித்தவர்கள்— வளாகத்தை ஊடறுத்துச் சென்ற இராணுவ வேலிகளுக்கருகில் அடிக்கடி வெடித்த மோதல்களூடே கடமை புரிந்தவர்கள்— மிதிவெடிகள் முற்றாக அகற்றப்படாதிருந்த மருத்துவபீட நிலப்பரப்பில் பல மாதங்கள் கால் பதித்து நடந்தவர்கள். எனவே இந்நிவாரணத்தைப் பெற இவர்கள் தார்மீக உரித்துடையவர்களேயாவர்.

எனவே எமது பல்கலைக் கழக நிர்வாகமே ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாக இக் கொடுப்பனவை முதலில் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் எமது நிர்வாகமோ அப்பல்கலைக்கழகங்களின் அத்தகு முன்மாதிரியை வழங்காததோடு, பிற பல்கலைக்கழகங்களின் முன்மாதிரியைக் கூடபின்பற்றக் கூடவில்லை

1990 இல் போர்ச் சூழலின் மத்தியில், பல்கலைக்கழகப் பணிகள் இடையூறின்றி நடைபெறத் துணை நின்ற ஊழியர்களுக்கு அக்கால யாழ். பல்கலைக்கழக நிர்வாகமானது பேரவையின் தற்றுணிவின் பேரில் கஷ்ட நிவாரணத்தை வழங்கியிருந்தது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள பிற பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட்டமையால், அவ்வாறே எமக்கும் வழங்குமாறு பேரவையைக் கோர நாம் சட்ட ரீதியான உரித்துடையவர்களேயாவோம். எமக்கு இக்கொடுப்பனவை வழங்க பேரவையும் அதிகாரமுடையதேயாகும்.

ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் இக்கஷ்ட நிவாரணத்தை வழங்க தயக்கம் காட்டுகின்ற எமது பல்கலைக்கழக நிர்வாகம், தற்காலிக விடுவிப்பின் அடிப்படையில் பல்கலைக்கழக உயர் அதிகாரியாக கடமையாற்றிய அரசாங்க ஊழியரொருவருக்கு மட்டும் இக்கொடுப்பனவை வழங்கியது. அத்துடன் பல்கலைக்கழக ஊழியருக்கு மட்டுமே உரித்தான – மிதமிஞ்சிய வேலைச் சுமைகளை அகற்றுவதற்கான படியையும் – அவருக்கு வழங்கியது. அவருக்கு இவ்விரு கொடுப்பனவுகளையும் வழங்கிய நிர்வாகம், இதே போன்று தற்காலிக விடுவிப்பின் அடிப்படையில் பல்கலைக்கழக ஆசிரியராக கடமையாற்றிய அரசாங்க ஊழியருக்கு இக் கஷ்ட நிவாரணத்தை வழங்க முன்வரவில்லை.

எனவேதான் எமது உள்ளக்குமுறலை, மனவேதனையை வெளிப்படுத்தும் முகமாக – அரசாங்கத்தின் பாராமுகத்தை, எமது நிர்வாகத்தின் மெத்தனப் போக்கை கண்டிக்குமுகமாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதென முடிவு செய்துள்ளோம்.

எமது ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தால் பல்கலைக்கழக சமூகத்தினருக்கு ஏற்படும் சிரமங்கள் குறித்து மிகவும் வருந்துகிறோம். நீர், மின் விநியோகப் பணியாளருக்கும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும்வேலை நிறுத்தத்திலிருந்து விலக்களித்துள்ளோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

★

# பூவரசங்குளம் புதிய பாதை அமைப்பு வேலை ஆரம்பம்

வவுனியா, ஜூன் 22

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு போக்குவரத்துச் செய்வதற்காக அமைக்கப்பட்டு வரும் பூவரசங்குளம் ஊடான பாதையின் மூன்றாம் கட்ட அமைப்பு வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

துணுக்காயிலிருந்து பூவரசங்குளம் ஊடாக வவுனியா வரை அகதிகளுக்கான ஐ.நா. தூதரக ஆதரவுடன் அமைக்கப்பட்டு வரும் இந்த பாதையின் இரண்டு கட்ட வேலைகள் ஏற்கனவே பூர்த்தியாகி விட்டன. தற்பொழுது பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மூன்றாம் கட்ட வேலைகளைச் செய்வதற்காக தார் உட்பட தேவையான அனைத்துப் பொருள்களும் அங்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இதனையடுத்தே மூன்றாம் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதி அமைக்கும் பணி அடுத்தமாத இறுதிப் பகுதியளவில் பூர்த்தியாகும்எனவும் ஓகஸ்ட் மாத முதல் வாரமளவில்இந்தப்பாதை பயணிகள் பாவனைக்காகத்திறந்து விடப்படும் எனவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-164-9)

## நீரிறைக்கும் இயந்திரங்களை சமாசம் எடுத்து வரும்

அரியாலை, ஜூன் 22

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவு சமாசம் கொழும்பில் இருந்து நீரிறைக்கும் இயந்திரங்களைத் தருவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

முப்பது நீரிறைக்கும் இயந்திரங்களும், சைக்கிள்களும் கப்பலில் எடுத்து வருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இதனைவிட உணவுப் பொருள்கள், பால்மா வகைகள் என்பனவும் கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

(ஐ-17)

## பாடசாலைகளுக்கு உபகரணங்கள்

நெடுந்தீவு, ஜூன் 22

நெடுந்தீவு மேற்கு ஐக்கிய தீபம் சன சமூக நிலையம், மத்தி சனசமூக நிலையம், ஆகியவற்றிற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியில் இருந்து வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் ஜெனரேற்றர்களும் மேற்கு சைவப்பிரகாச வித்தியசாலைக்கு றோணியோ இயந்திரம் தட்டச்சு என்பனவும் வழங்கப்பட்டன.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர்என். மனோகரன் இவற்றைக் கையளித்தார்.

(ஐ-111)

## நாளை

ஆனி - 9

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தசி

முற்பகல் 11.53 வரை.

நட்சத்திரம்: ரோகிணி

முற்பகல் 7.53 வரை.

அமாவாசைவிரதம்

சுபநேரம் 10.24 - 11.54

ராகுகாலம்: 02.54 - 02.24

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

ஒழுக்கம் உண்டாகாத இலக்கியம் கல்வியால் ஒரு வித உபயோகமும் கிடையாது.

- காந்தியடிகள்

## பேக்கரி உரிமையாளருக்கு அறிவுறுத்து

சண்டிலிப்பாய், ஜூன் 22

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் செயற்பட்டு வரும் பாண் தயாரிக்கும் பேக்கறிகளை சுகாதார விதிகளுக்கு இணங்க துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று அதன் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரியினால் இதுபற்றிய அறிவுறுத்தற் கடிதம் பேக்கரி உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-135)

## பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, ஜூன் 22

யாழ். இந்துக்கல்லூரி சதுரங்க கழகம் யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் நடத்திய யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான வருடாந்த சதுரங்க சுற்றுப் போட்டியின் பரிசளிப்புவிழா நேற்று சனிக்கிழமை கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் செல்வன் நா. குணதாசன் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் பிரதம அதிதியாக வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம் கலந்து கொண்டார்.

(ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடூரம், அநீதி இல்லாத உலகை காணமுடியாத நிலையே தொடர்கிறது

## சர்வதேச மன்னிப்புச்சபை விசனம்

கொழும்பு, ஜூன் 22

மனித உரிமைகள் குறித்த சர்வதேச பிரகடனம் மேற்கொள்ளப்பட்டு 50 ஆண்டுகள் ஆகின்றபோதும், மனித உரிமைகள் மீறலால் பாதிக்கப்பட்டவர்கள், 1948 இல் அரசுகளால் உறுதியளிக்கப்பட்ட கொடூரமும் அநீதியும் இல்லாத உலகை இன்னமும் காணமுடியாதவர்களாக உள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள 1998 ஆம் ஆண்டு அறிக்கையில் மேற்சண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலகில் பெரும்பாலான மக்களைப் பொறுத்தவரை சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள மனித உரிமைகள் வெறும் காகித உறுதிமொழிகளாகவே இருக்கின்றன. இந்த உறுதிமொழி ஒரு நாளைக்கு ஒரு டாலருக்கும் குறைந்த வருமானத்தில் வாழப் போராடிக் கொண்டிருக்கும் 1.3 மில்லியன் மக்களுக்கும், ஒவ்வொரு நாளும் போஷாக்கின்மையாலும், தடுக்கப்படக்கூடிய நோய்களாலும் இறந்து கொண்டிருக்கும் 35 ஆயிரம் மக்களுக்கும், எழுத வாசிக்கத் தெரியாத பில்லியன் வயதான வர்களுக்கும், உலகின் சுமார் அரைவாசி நாடுகளில் சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கும், சித்திரவதைக்கு ஆளாகின்ற மக்களுக்கும், நிறைவேற்றப்படாத ஒன்றாகவே இருக்கிறது.

இதில் மேலும் வருத்தம் தருவது யாதெனில் சில அரசுகள் மனித உரிமைகளின் சர்வதேசிய தன்மைகளின் மேன்மைகளை மாற்றுவதால் இந்நடவடிக்கைகளை மன்னிக்க முனைவதாகும்.

அரசுகள் முன்வைக்கும் இந்த வாதங்களுக்கு எதிராக, மற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு பல ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் தமது உரிமைகளைப் பணயம் வைத்துப் பாடுபடுகிறார்கள். அதனால் இவர்களில் பலர் காணாமல் போகிறார்கள்; கொல்லப்படுகிறார்கள்; சிறையில் அடைக்கப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் 141 நாடுகளில் இடம்பெற்றுள்ள சித்திரவதைகள், வன்செயல்கள், காணாமல் போதல் மற்றும் துஷ்பிரயோகங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 22

கம்பர்மலை அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை பகல் 11.50 முதல் 1.35 வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது

இன்றைய தினம் காலை 11.50 வரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும். (ஐ-6-8)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன் 22

காரைநகர் திக்கரை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 00 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் ஆனி உத்தர தினத்தன்று காலையும் நடைபெறும்.

(ஐ-15-30-8)

★ ★ ★

யாழ்ப்பாணம். ஜூன், 22

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் (பஞ்ச தள) இராஜ கோபுர சம்புரோஷண மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறும்.

(ஐ-ரீ-8)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன் 22

சண்டிலிப்பாய் வேவிற்பதி அருள்மிக பூர்ணாபுஸ் கலா சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் தேவஸ்தான இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை பகலும், நாளை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் புதன்கிழமை காலை அபிஷேகமும், மாலை திருக்கல்யாணமும் நடைபெற்று சுவாமி பூந்தாண்டிகையில் எழுந்தருளி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

(ஐ-30)

★ ★ ★

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலில் இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

தீர்த்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கும், பூங்காவனம் மறுநாள் புதன்கிழமை மாலை 5 மணிக்கும் இடம்பெறும். (ஐ-109-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம்பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை அருள்மிகு வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை பகல் 11.50 மணி முதல் 1.30 மணிவரையுள்ள சுபநேரத்தில் சிவஸ்ரீ சி. திருநீலகண்டக் குருகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-8)

# கருத்தரங்கு

சுழிபுரம், ஜூன் 22

சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டின் ஞாபகார்த்தக் கருத்தரங்கு மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெறும். வித்தியாலய அதிபர் திருமதி ஆர். சோதிலிங்கம் தலைமையில் ஸ்ரீ இராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்குவார். (ஐ-28)

★ ★ ★

சண்டிலிப்பாய், ஜூன் 22

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமையன்று உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கருத்தரங்கில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ''எது பகுத்தறிவு'' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

இதே வேளை—

அன்றைய தினம் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளையும் சுவாமி சித்ரூபானந்தா வழங்குவார். (ஐ-135)

# மருந்து விநியோகம்

சண்டிலிப்பாய், ஜூன் 22

சங்கானை அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, இளவாலை அரசினர் வைத்தியசாலை ஆகியனவற்றிக்கு கடந்த வாரம் யாழ். சுகாதாரத்திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினால் இவ்வருட இரண்டாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் திணைக்கள லொறி மூலம் நேரடியாகக் கொண்டு சென்று விநியோகிக்கப்பட்டது. (ஐ-135)

# லக்ஸ்பிறே தட்டுப்பாடு

திருநெல்வேலி, ஜூன் 22

தனியார் கடைகளில் 'லக்ஸ்பிறே' பால்மா அதிகரிக்கப்பட்ட விலையில் விற்கப்பட்டு வருகின்றது. முன்பு 82 ரூபாவாக விற்கப்பட்ட 400கிராம் நிறையுள்ள 'லக்ஸ்பிறே' பக்கற் தற்போது 90 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது. இதேவேளை வர்த்தக திணைக்கள விற்பனை நிலையங்களில் லக்ஸ்பிறே பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ஐ-135)

# காலாவதியான பிஸ்கட் மானிப்பாயில் பறிமுதல்

மானிப்பாய்ப்பகுதியிலுள்ள சில வியாபார நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதி காலாவதியான— பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்ட— 46 கிலோ நிறையுள்ள பிஸ்கட் வகைகள் மானிப்பாய் பொதுச்சுகாதார பரிசோதகரினால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

கடந்த வாரம் மானிப்பாய் பஜார் பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் மானிப்பாய் பொதுச்சுகாதார பரிசோதகர் நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போதே கடைகளில் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்ட மேற்படி பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டன.

பிஸ்கட்டுகள். சொக்கிலேற், இனிப்பு வகைகள் ஆகியவற்றை கடைகளில் வாங்கும் போது அவை காலாவதியாகும் திகதியை அவதானித்து வாங்குமாறு மானிப்பாய் பொதுச்சுகாதார பரிசோதகர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ-135)

## பஸ்களில் இடநெருக்கடி

# 'சீஸன்' ரிக்கெற் பெற்ற மாணவர்கள் ஏமாற்றம்

வடமராட்சிப் பிரதேசத்தில் பாடசாலை பஸ்சேவை போதியளவு நடைபெறாததினால் 'சீஸன்' ரிக்கெற் பெற்ற மாணவர்கள் பயணம் செய்ய முடியாது நடுத்தெருவில் நிற்கவேண்டியுள்ளது.

வல்வெட்டித்துறை, நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள பிரதான பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் வசதி கருதி மூன்று பாடசாலை பஸ் சேவைகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போ நடத்தி வருகிறது 'டமராட்சிப்பிரதேசத்தில் மூன்று பாடசாலை பஸ் சேவைகள் நடைபெற்று வருகின்ற போதிலும் அந்த பஸ் வண்டிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதிக மாணவர்கள் பாடசாலை பஸ் வண்டிகளில் பயணம் செய்வதால் உண்டாகும் நெருக்கடியையடுத்து 'சீஸன்' ரிக்கெற் பெற்று பயணம் செய்வதற்காக இடைவழியில் காத்திருக்கும் மாணவர்களை ஏற்ற முடியாத நிலையில் பாடசாலை பஸ் வண்டிகள் நிறுத்தப்படாமலேயே சென்று விடுகின்றன. பஸ் வண்டிகளில் இடமின்மையால் 'சீஸன்' ரிக்கெற் பெற்றும் பயணம் செய்ய முடியாத நிலைக்கு பல மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

(ஐ-173)


கோப்பாய் பிரதேச செயலகம்

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் நெசவு நிலையங்களின் திருத்த வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 10 - 07 - 98 காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். விவரங்களை எனது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

01 சிறுப்பிட்டி நெசவு நிலைய திருத்தவேலை
02 நவக்கிரி நெசவு நிலைய திருத்தவேலை
03 பத்தமேனி நெசவு நிலைய திருத்தவேலை

மீளப் பெறக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா 250 படிவக்கட்டணமாக ரூபா 100 ம் காசாக செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 10 - 07 - 98 நண்பகல் 12-00 மணிக்கு திறக்கப்படும்.

க. கேதீஸ்வரன்
பிரதேச செயலர், கோப்பாய்.

(சி-4081)



## நன்றி நவில்கின்றோம்

நெடுந்தீவு கிழக்கு
சனசமூக நிலையத்தினராகிய நாம்
எம் நிலையத்திற்கு
வர்ணத்தொலைக்காட்சிப்பெட்டி, ஜெனரேட்டர்
ஆகியவற்றை அன்பளிப்பாகத் தந்துதவிய

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
நாடாளுமன்ற உறுப்பினரும், செயலாளர் நாயகமுமாகிய
கௌரவ K. N. டக்ளஸ் தேவானந்தா
(பா. உ)
அவர்கட்கும்

யாழ், மாவட்ட அரசியற் பொறுப்பாளர்
தோழர் S. ஜெகன்
அவர்கட்கும்

தீவக அரசியற் பொறுப்பாளரும்,
ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான
தோழர் N. மனோகரன்
அவர்கட்கும்

நெடுந்தீவுப் பொறுப்பாளர்
தோழர் K. மோகன்
அவர்கட்கும்

எம் இதயங் கனிந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயற்குழு உறுப்பினர்,
நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம்,
நெடுந்தீவு,

நெடுந்தீவு. (சி/4082)



உ

யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

## நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் - 1998

காலம்: 26 - 06 - 98 புதன்கிழமை
முற்பகல் 9. 00 மணி [புதிய நேரம்]
இடம்: கல்லூரி பிரதான மண்டபம்.
[ மருதனார்மடம் ]

தலைவர்: திரு. க. நாகராசா [அதிபர்]

பிரதம விருந்தினர்:
திரு. வீ. இராசையா
[பிரதிக் கல்விப்பணிப்பாளர், வலயம்-2, கோப்பாய்]

நிறுவியவர் நினைவுப் பேருரை:
திரு. எஸ். கனகசபை [பொறியியலாளர்]

கௌரவ விருந்தினர்:
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

பரிசில் வழங்கல்:
திரு. வீ. இராசையா
வைத்திய கலாநிதி திருமதி சிவபாதநாயகி கனகசபை

நன்றியுரை:
திரு. நா. போஜன்
[ செயலாளர், பழையமாணவர் சங்கம் ]

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(சி/4084)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமான் தலைமையிலான
# கூட்டமைப்பில் சந்திரசேகரனும்

## தேர்தலில் பொதுச் சின்னத்தில் போட்டி

கொழும்பு, ஜூன் 22

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட மலையக அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும் ஒன்றிணைந்து உருவாக்கத் தீர்மானித்துள்ள கூட்டமைப்பில் பிரதி அமைச்சர் பெ. சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியும் இணைவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அட்டனில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றிலேயே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும் இணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதென தீர்மானிக்கப்பட்ட போதிலும் மலையக மக்கள் முன்னணி இதில் இணைவதற்கு கடந்த சனிக்கிழமை வரை இணக்கம் தெரிவிக்காமல் இருந்து வந்தது.

எனினும் சனிக்கிழமை அட்டனில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் மலையக மக்கள் முன்னணியும் இணைவதற்கு இணக்கம் தெரிவித்தது.

அதேசமயம் இந்தக் கூட்டமைப்புக்கு 'இந்திய வம்சாவளி மக்கள் பேரவை' எனப் பெயரிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் மலையக மக்கள் முன்னணி இந்தப் பெயருக்கு இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெற உள்ள மாகாண சபைத் தேர்தலில் இந்தக் கூட்டமைப்பு பொதுச் சின்னம் ஒன்றின் கீழ் போட்டியிடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-9-10)

# மலையக தமிழருக்கு தனி நிர்வாக அலகு

## சந்திரசேகரன் கோரிக்கை

''மலையகத் தமிழர் செறிவாக வாழும் பிரதேசங்களை உள்ளடக்கியதான மாகாண நிர்வாக அலகு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றநிலைப்பாட்டில் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கும், அரசியல் முயற்சிகளில் இறங்கவும் கூட்டமைப்பு செயல்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.''

மலையகத்தில் அமைப்புக்கள் இணைந்து உருவாக்கியுள்ள கூட்டமைப்புக்குறித்து மலையக மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மலையக மக்கள் ஒரு தனியான சிறுபான்மை தேசிய இனம் என்ற அடிப்படையில் தமக்கென்று சக்திமிக்க அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்ளுவது அத்தியாவசியமானதாகும்.

எமது நாட்டில் சிறுபான்மை இனங்களில் அரசியல் உரிமை பற்றி பேசப்படுகின்ற இக்காலகட்டத்தில் எமது தனித்துவத்தைப் பேணவும், அரசியல் உரிமைகளற்ற பரிதாபகரமான சமூக நிலையை மாற்றவும், இத்தகையதேவை தற்போது அவசரமாகியுள்ளது. இந்நிலையில் மலையக அமைப்புகளுக்கிடையிலானஅரசியல் ரீதியான ஐக்கியத்தினை மலையக மக்கள் முன்னணி ஆதரிக்கின்றது.

ஆனால் இத்தகைய கூட்டு செயற்பாட்டின் மூலம் என்னென்ன அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு முனைந்துள்ளோம் என்பதனை தெளிவாக மக்கள் முன் வைத்தாக வேண்டும். தேர்தலில் மக்களின் வாக்குகளை சிதறாமல் சேகரிப்பதற்காகவோ, வேட்பாளர்களை வெல்ல வைப்பதற்காகவோ தான் இந்த கூட்டு அமையுமானால் அதற்கு மலையக மக்கள் முன்னணி உடன்பட இயலாதுஎன்பதே எமது நிலைப்பாடாகும்.

எனவே எமது பிரதான அரசியல் இலட்சியங்களையும், கோரிக்கைகளையும் முன் வைக்கும் போது கீழ் கண்டவைகளையும் இணைத்துக் கொள்ளுவதில் கவனம் செலுத்த வேண்டுமென எதிர்ப்பார்க்கின்றோம்.

★ மலையக மக்கள் செறிவாக வாழும் மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகளும், பிரதேச சபைகளும் உருவாக்கப்படுவதற்கு காலம் நிர்ணயித்து செயற்பட வேண்டும்.

★ மலையக கல்வி மேம்பாட்டுக்கு, தனியான திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டு அவைகளை வென்றெடுப்பதற்காக செயற்பட வேண்டும். இத்திட்டத்தில் மலையக பிரதேசத்துக்கான தேசிய பாடசாலைகள், கல்விக் கல்லூரி, பல்கலைக்கழகம் போன்ற கோரிக்கைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும்.

★ மலையக இளைஞர்களின் கல்வி தராதரத்தினை கவனத்தில் எடுத்து இம்மக்களின் விகிதாசாரத்திற்கேற்ப அரசாங்க உத்தியோகங்கள் வழங்கப்படுவதற்கான நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்காக செயற்படவேண்டும்.

★ இலங்கையில் இனப் பிரச்சினை தீர்வுக்கான செயற்பாட்டோடோ, தீர்வுப்பொதியோடோ சம்பந்தப்படுத்தாமல் சகல மலையகத்தவர்களும் இந்நாட்டுப் பிரஜைகளே என்பதை உடனடியாக அரசு ஏற்றுக் கொள்வதற்கேற்ற செயற்பாட்டில் இறங்கவேண்டும்.

# இடமாற்றம் கோரும் தாதியர்

வவுனியா, ஜூன் 22

யாழ். மாவட்ட வைத்திய சாலையில்கடமையாற்றி தற்போது வவுனியா வைத்திய சாலையில் தற்காலிகமாகக் கடமையாற்றும் எட்டுத் தாதியர்கள் தமக்கு இடமாற்றம் வழங்க வேண்டும் என சுகாதார அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெயர்ந்து வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் இந்த எட்டுத் தாதியரும் வவுனியாவிலோ அல்லது அதனை அண்டிய இடங்களிலோ கடமையாற்றக் கூடியவாறு தமக்கு இடமாற்றத்தைப் பெற்றுத்தருமாறு கேட்டுள்ளனர்.

தாம் பலமுறை இந்த இடமாற்றம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக்கொண்டு வந்தும் தமக்கு சார்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு தமக்கு மூவாயிரம் ரூபா மட்டுமே சம்பளமாக வழங்கப்படுவதாகவும் தமக்கு உரியவாறு அதிகரித்த சம்பளத்தை வழங்குமாறும் அவர்கள் தமது மகஜரில் கேட்டுள்ளார்கள்.

(இ-164-9)


இதோ புதிய அம்சங்களுடன் !

**- சுந்தரன் -**

(ஆனி 15 இதழ்) விலை: ரூபா 15/=

★ உருவகக் கதைகள்
★ சிரிகதை
★ சிறுகதை
★ கவிதை
★ நகைச் சுவைத் துணுக்குகள்
★ சிரிகதைப் போட்டி
★ பொது அறிவுப் போட்டி

(சி/4085) — இன்னும் பல அம்சங்களுடன்.



யாழ். மாவட்ட

**சாரணர் கிளைச்சங்கம்**

**பாராட்டி வாழ்த்துகிறது**

இலங்கை சாரணர் சங்கத்தினால் மூன்று தசாப்தங்களுக்குப் பின் மேற்படி சங்கத்தின் சேவையாளர்களுக்கு

**நீண்டகால சேவை விருது**

வழங்கப்படுகின்றது.

பெறுநர்:

திரு. த. கனகராசா
(முன்னாள் உதவி மாவட்ட ஆணையாளர்)

திரு. D. V. M. இராசசிங்கம்
(யாழ். மாவட்ட ஆணையாளர்)

திரு. சு. ஏகாம்பரநாதன்
(யாழ். மாவட்ட உதவிஆணையாளர்நிர்வாகம்)

திரு. இ. ஞானசோதியன்
(யாழ். மாவட்டஉதவி ஆணையாளர், தீவகம்)

திரு. செ. தேவறஞ்சன்
(யாழ். மாவட்ட உதவி ஆணையாளரும், மாவட்ட பயிற்சி குழு செயலாளரும்)

சாரண சேவை தியாக உணர்வு கிளர்ந்து நீண்டகாலமனமுவந்து பாராட்டி வாழ்த்தும்

யாழ். மாவட்ட
சாரணர் கிளைச் சங்கம்.

(57046)


# கோரிக்கை

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதிப் பகுதியில் குடிதண்ணீர்த்தாங்கிஒன்றை ஏற்படுத்தித்தருமாறு இப்பகுதி மக்கள் யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### யாழ். மாணவர்கள்

# கொழும்பு போட்டிகளில் பங்குபற்ற ஏற்பாடு

வவுனியா, ஜூன் 22

யாழ். மாவட்ட மாணவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் நடந்த தமிழ்த்தினப் போட்டிகளில் பங்கு பற்ற முடியாமல் போனாலும் கொழும்பில் அகில இலங்கை ரீதியாக நடைபெற உள்ள தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும்செய்துதருவதாக வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் டிவகலாலாவைச் சந்தித்த புளொட் அமைப்பின் உப தலைவர் மாணிக்கதாஸன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன் ஆகியோருக்கே அவர் இந்தஉறுதி மொழியை வழங்கியதாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டு மாணவர்கள் தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் போனது தொடர்பாகவும் — அதனால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றியும் — நேற்று முன்தினம் டிவகலாலாவைச் சந்தித்து விளக்கிக் கூறியதை அடுத்தே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்துப் பிரச்சினைகாரணமாகவே குடாநாட்டு மாணவர்கள் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் போயுள்ளது. எனினும் அகிலஇலங்கை ரீதியாக நடைபெற உள்ள போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு வேண்டிய அனைத்து ஒழுங்குகளையும் செய்து தருவதாக டிவகலாலா தெரிவித்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

# நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் குளங்களைப் பார்வையிட்டனர்

யாழ். மாவட்டத்தில் உள்ள கடல் நீரேரிகள் குளங்கள்பற்றிய ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதற்காக கடந்த வாரம் இங்கு வந்திருந்த நோர்வே நாட்டுப்பிரதிநிதிகளானஎரிக் ஹெலன்ட்கென்சன், கதிரவேலு சண்முகநாதன் ஆகியோர் குடாநாட்டிலுள்ள கடல் நீரேரிகளையும் குளங்களையும் சென்று பார்வையிட்டனர்.

தொண்டமானாறு கடல் நீரேரியில் அமைக்கப்பட்டுள்ள தடை அணை தற்போது மிகவும் சேதமுற்ற நிலையில் காணப்படுகிறது. எனவே இது திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

இதேபோன்று உப்பாறு கடல் நீரேரியின் அரியாலைத்தடை அணை மற்றும் வழுக்கியாறு அராலித்தடை அணை ஆகியவையும் சிறியளவிலான சேதத்துக்குள்ளாகியுள்ளன. ஆயினும் இவை பெரியளவில் திருத்தப்படவேண்டிய நிலையில் இல்லை என்று கதிரவேலு சண்முகநாதன் தெரிவித்தார்.

யாழ். குடாவிலுள்ள கடல் நீரேரிகள் குளங்கள் ஆகியனவற்றை அபிவிருத்தி செய்வதற்கு உதவி செய்யுமாறு இலங்கை அரசு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நோர்வே அரசு இதுதொடர்பான சாத்தியக் கூறுகள் பற்றியும் இதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றியும் ஆராய்ந்து வருமாறு எம்மை அனுப்பிவைத்துள்ளது. நாங்கள் சுமார் ஒரு வார காலம் இங்கு தங்கியிருந்து இவற்றைப் பார்வையிட்டு இவை தொடர்பான அறிக்கையை நோர்வே அரசுக்குச் சமர்ப்பிப்போம். பின்னர் அது பற்றி ஆராய்ந்து நோர்வே அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-5-6)

# யாழ். ஆஸ்பத்திரி ஜெனரேட்டர்களில் ஒன்று பழுது

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். போதனா வைத்திய சாலையில் இயங்கி வந்த உயர்வலு கொண்ட இரண்டு மின் விநியோக இயந்திரங்களில் ஒன்று கடந்த இரு நாள்களாக பழுதடைந்த நிலையில் உள்ளது.

இதன் றேடியேற்றரே பழுதடைந்து இயங்க முடியாத நிலையில் இருப்பதாகவும்—

இதற்கு வேண்டிய றேடியேற்றரை கொழும்பில் இருந்தே வரவழைக்க வேண்டியிருப்பதால் அது தருவிக்கப்பட்ட பின்பேஅதனை இயங்க வைக்க முடியும் எனவும் அதன் திருத்த வேலைகளை மேற்கொள்ளச் சென்ற, சுன்னாகம் இலங்கை மின்சார சபையினரால் தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

# துப்பாக்கிச் சூட்டில் பலியானவரின் சடலம்

கடந்த வெள்ளிக்கிழமை காலை கொடிகாமம் எழுவன் என்னும் இடத்தில் துப்பாக்கிச் சூட்டில் பலியானவரின் சடலம், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரண விசாரணை நடைபெற்று பின் பிரேத பரிசோதனைக்காக நேற்று முன்தினம் மாலை கொடிகாமம் பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைககப்பட்டது.

மயிலு இராமச்சந்திரன் (வயது 41) என்பவரே துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் ஆவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

(இ-139)

# தாச்சி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். பல்கலைக்கழக விளையாட்டவையினால் நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 3ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

தாச்சிச் சுற்றுப்போட்டிகள் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி ஆண்கள், பெண்களுக்கானபோட்டிகள் நடைபெற்று வருகின்றன.

ஆண்களுக்கான அரை இறுதிப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதியும், பெண்களுக்கான அரை இறுதிப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன.

(இ-8)

# மணிக்கோபுரம் அமைப்பு

கம்பர்மலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில சுமார் ஒருஇலட்சம் ரூபா செலவில் புதியமணிக்கூண்டுக்கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது.

மணிக்கூண்டுக் கோபுரத்தில் மணி ஏற்றும் வைபவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றது.

இப்பகுதி மக்களின் நிதி அன்பளிப்பினால் இப்புதிய மணிக்கூண்டுக் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி ஆணைக்குழுவின்

# அறிக்கையை எதிர்த்தவர்கள் அதனை பயன்படுத்தி என்னைத் தண்டித்தனர்

## ஐ. தே. க. மீது விஜயபால மெண்டிஸ் தாக்கு

கொழும்பு, ஜூன் 22

''ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என தெரிவித்து வந்த ஐ. தே. கட்சியினர் அந்த அறிக்கையைப் பயன்படுத்தி எனக்குத் தண்டனை வழங்கியுள்ளனர்.''

மேற்கண்டவாறு ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான விஜேபால மெண்டிஸ் கூறினார்.

நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஐ. தே. க. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்.

தனது உரையில் அவர் மேலும் கூறியதாவது:

ஐ. தே. கவுக்காக எனது மகன் உயிர்த்தியாகம் செய்தான். அந்த மகனின் நினைவுதினமன்று ஐ. தே. கட்சியினர் எனக்குத் தந்த ''இடை நிறுத்தம'' என்ற பரிசு எனது அரசியல் வரலாற்றில் மறக்க முடியாதது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் யோசனைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஐ. தே. கட்சியில் ஒரு குழுவொன்று செயற்பட்டு வருகின்றது. ஐ. தே. கட்சியின் வரலாறுகள் புரியாதவர்கள் தற்போது எனக்கு எதிராகச் செயற்படுகின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில் காமினி திஸநாயக்கவுக்காக பிரசாரம் செய்தது தவறா? அவர் ஐ. தே. கட்சி வேட்பாளராகவே போட்டியிட்டார்.

ஐ. தே. கட்சி எனக்குச் செய்துள்ள துரோகத்துக்காக நான் அக்கட்சியை விட்டு விலக வேண்டிய அவசியம் எனக்கில்லை.

ஐ. தே. க. அரசியல் பாதையில் 50வருடம் வளர்ந்தவன் நான். நான் என்றும் பின்வாங்கிச் சென்றவன் அல்லன். எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் முகம் கொடுக்கத் தயாராகவுள்ளேன்.

சில உண்மைகளைத் தற்போது கூறமாட்டேன். நீதிமன்றம் செல்லவுள்ளேன். நீதிமன்றம் மூலம் அந்த உண்மைகளைவெளிப்படுத்துவேன்.''

இப்படி அவர் கூறினார். (இ-21)

## இலங்கை தமிழர் கைது!

சென்னை, ஜூன் 22

இலங்கையைச்சேர்ந்ததமிழ் அகதி ஒருவர் நேற்று முன்தினம் இரவு தமிழ்நாடு மண்டபம் கடற்கரையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இலங்கைக்கு உடைகள் மற்றும் ஓட்டும் கருவிகள் ஆகியவற்றைக் கடத்திச் செல்ல முயன்ற போதே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

புவனேந்திரன் என்ற இந்த தமிழ் இளைஞர் கிளிநொச்சியில் இருந்து கடந்த ஆண்டு மே மாதம் தமிழ் நாட்டுக்கு அகதியாக வந்தவர் என்றும்– அவருடன் இன்னொருவரும் தொடர்பு வைத்திருந்தார் எனவும்–

அவரைப் பொலீஸார் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

### யாழ் ,.

(முதலாம் பக்கத் தொடர்)

யுள்ளார்.

இந்தப் பணிப்புரையின் பிரதியை அவர் ஜனாதிபதியின் கவனத்துக்கும் அனுப்பியுள்ளார்.

''தற்சமயம் 40 சத வீத மாணவர்களுக்கு நிவாரணம் நிறுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் மேலும் ஒரு தொகையினரின் நிவாரணமும் நிறுத்தப்படும்'' என்றும் அவர் அந்தப் பணிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பணிப்புரையை பிரதேச செயலர்களுக்கு அனுப்ப இருப்பதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (இ-3)

### உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

மதிக்கமாட்டார்கள் என்பது மட்டும் உண்மை.

எமது உறுப்பினர்களை மீட்கும் பணியை பாதுகாப்பு படையினரிடம் விட்டுவிட்டோம். நம் மக்கள் மேலும் பீதிகொள்வதை நாம் விரும்பவில்லை. படையினர் நல்லதொரு முடிவினை தருவார்கள் என திடமாக நம்புகின்றோம். தவறுக்குத் தவறு என்ற நிலையில் நாமும் நடவடிக்கையில் ஈடுபட்டால் அது இன்றைய சூழ்நிலையில் யாழ் மக்களை பெரிதும் பாதிக்கும்,

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வாறான செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை ஆகும். அரசும் இது விடயத்தில் தலையிட்டு உத்தரவாதமும் உறுதியும் வழங்கும் என எதிர்பார்க்கிறேன்— என்றார். (இ)

# மின்மாற்றி தகர்ப்பு தொடர்பாக 7பேர் கைது!

இரத்தினபுரியில் அதிசக்தி வாய்ந்த மின்மாற்றி தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களிடம் இருந்து முக்கிய சில தகவல்கள் பெறப்பட்டுள்ளன எனவும்— விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் — பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற இந்தக் குண்டுவெடிப்பால் 630 கிலோ வோல்ட் சக்திவாய்ந்த மின்மாற்றி முற்றாகசேதமடைந்தது. இதனால் மின்சார சபைக்கு 15 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. (9)

வடமராட்சி கிழக்கில்

# தபாற் பெட்டிகளை அமைக்க கோரிக்கை

செம்பியன்பற்று ஜூன் 22

வடமராட்சி கிழக்குப்பகுதியில் ஐந்து இடங்களில் புதிய தபாற் பெட்டிகளை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மாமுனை, செம்பியன்பற்று தெற்கு, மானியவளை, நெல்லியான், மணற்காடு ஆகிய பகுதிகளிலேயே விரைவில் தபாற் பெட்டிகளை அமைக்குமாறு கடந்த புதன்கிழமை மருதங்கேணி உதவி அரச அதிபர் தலைமையில் நடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இப்பகுதியில் பழுதடைந்துள்ள தபாற் பெட்டிகளைத் திருத்துமாறும் சம்பந்தப்பட்டோரைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-36)

# காலாவதியான பிஸ்கற் குளிர்பானம் விற்பனை

செம்பியன்பற்று, ஜூன் 22

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் காலாவதியான பிஸ்கற், குளிர்பான வகைகள் விற்பனை செய்யப்படுவதாகவும் இதைத் தடுக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் பாவனையாளர்கள் முறையிட்டுள்ளனர்.

குறிப்பாக குழந்தைகளுக்கான பிஸ்கற் வகைகளே பாவனைக்காலம் காலாவதியான பிறகும் விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர்கள் முறையிட்டுள்ளனர்.

பருத்தித்துறை, மந்திகை, செம்பியன்பற்று, நாகர்கோவில் பகுதிகளிலேயே இத்தகைய பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. (ஐ-36)

# சூழல், தொற்றுநோய் சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 22

நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கான சூழல் சுகாதாரத் தொற்று நோய்த் தடுப்பும் கட்டுப்படுத்தலும் என்னும் தலைப்பில் ஆறு நாள் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்கு இன்று திங்கள் ஆரம்பித்து 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன் இறுதி நாள் கருத்தரங்கு 29 ஆம் திகதி இடம்பெறும்.

இக்கருத்தரங்கில் மாநகர சபை மற்றும் வலிகாமம் பகுதி சுகாதாரத் தொண்டர்கள் 50 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யுனிசெவ் அனுசரணையுடன் சுவீடன் அரசாங்க நிதியுதவித்திட்டத்தின் கீழ் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

இக்கருத்தரங்கு 2 ஆவது பிரிவினர்க்கு தற்பொழுது நடைபெறவுள்ளது. மேலும் நான்கு பிரிவுகளில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக வைத்திய அதிகாரி டாக்டர் இ, தெய்வேந்திரன் தெரிவித்தார். (ஐ-5-6)

## பாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஜூன் 22

எட்டு மாத இடைவெளியில் ஐந்தாவது தடவை பாம்பினால் கடியுண்ட இளைஞன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்தவெள்ளியன்று இரவு 7 15 மணியளவில் டச்சு வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த பாலச்சந்திரன் பிரபாகரன் (வயது 21) என்னும் இளைஞரே பாம்பினால் கடியுண்டவராவார்.

நண்பனின் வீட்டுக்குச் சென்று விட்டு திரும்பும் வேளையில் சைக்கிள் சில்லுக்குள் அகப்பட்ட பாம்பு இவரது காலில் கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### நிவாரணத்தை..

(முதலாம் பக்கத் தொடர்)

நிறுத்தும் முடிவை ரத்துச் செய்யவேண்டும் — என்றுள்ளது. (இ-3)


JAFFNA TECHNICAL INSTITUTE

Reg. NO: 15251

JAFFNA, SRI LANKA.

தொழிற் பயிற்சிகள்

★ RADIO, T V. AND VIDEO DECK REPAIRING

சகல இன RADIO T. V. VIDEO DECK என்பன திருத்தப்படும் முறை ஆரம்பத்திலிருந்து விளக்கமாக பயிற்சியளிக்கப்படும். காலம் 9 மாதங்கள்.

★ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING

சகல இனMOTOR, FAN, TRANSFORMAR என்பன REWINDING செய்யப்படும் முறை ஆரம்பத்திலிருந்து விளக்கமாக பயிற்சியளிக்கப்படும். மற்றும் மின்சார வேலைகள் செய்யப்படும் முறை, மின் உபகரணங்கள் திருத்தப்படும் முறை என்பனவும் பயிற்சியளிக்கப்படும். காலம் 6 மாதங்கள்.

★ MOTOR MECHANISM

சகல இன நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் பைசிக்கிள் என்பன திருத்தப்படும் முறை என்பனவும் பயிற்சியளிக்கப்படும். காலம் 5 மாதங்கள்.

★ AIR CONDITIONING & REFRIGERATION

சகல இன குளிர்சாதனங்களும் திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து விரிவாகப் பயிற்சியளிக்கப்படும். காலம் 6 மாதங்கள்.

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:

26 - 06 - 19 8 (கிழமை நாள்களில்)

27 - 06 - 1998 (சனி, ஞாயிறு நாள்களில்)

குறிப்பு: சனி, ஞாயிறு வகுப்புக்கள் தொழில் செய்வோரின் நன்மை கருதி நடை பெறுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

DIRECTOR

52/1, ஸ்ரான்லி வீதி [றெயில்வே கடவையருகில்],
யாழ்ப்பாணம். (17019)



சிமெந்து விநியோகம்

கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தால் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட EAGAL (525R) சிமெந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டு 1998-07-10 ஆம் திகதியில் இருந்து விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்வதற்கு எங்கள் யாழ்ப்பாணக் கிளையில் தொடர்பு கொண்டு முற்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

1. சில்லறை விலை: 510ரூபா
2. மொத்த விலை: 500 ரூபா (200 பக்கற்றுக்கு மேற்படவும்)
3. மொத்த விலை: 485 ரூபா (1000 பக்கற்றுக்கு மேற்படவும்)

கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் வ./ப.,
164, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (56994)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22 -06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org